பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 109

13.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் கிராம நிர்வாக அலுவலருக்கு 4 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 2015-ம் ஆண்டு, புகார்தாரர் தனது தாயாரின் பெயரில் உள்ள பட்டாவை தனது பெயரிலும் தனது தந்தையின் பெயரிலும் பெயர் மாற்றம் செய்து வழங்கக்கோரி கிராம நிர்வாக அலுவலர், துப்புகானப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்ட அலுவலகத்தில் மனு அளித்திருந்தார். இது தொடர்பாக திரு.ரஜினி, கிராம நிர்வாக அலுவலர், துப்புகானப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் மனுவை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கிருஷ்ணகிரி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.ரஜினி, கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் லஞ்சபணம் ரூ.1,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இன்று 13.10.2026ந் - தேதி திரு.ரஜினி அவர்களுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.4,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 109
13.10.2026

FORMER VILLAGE ADMINISTRATIVE OFFICER CONVICTED IN BRIBE CASE

During 2015, the complainant submitted an application at Village Administrative Office, Thuppuganapalli Village, Hosur Taluk, Krishnagiri District, seeking transfer of patta in his name and his father's name from his mother's name. In this regard, Tr. Rajini, Village Administrative Officer, Thuppuganapalli Village, Hosur Taluk, Krishnagiri District, demanded Rs.1,000/- as bribe from the complainant for processing of the said application. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti–Corruption, Krishnagiri Detachment. In this connection a trap was organized. During the trap proceedings, Tr. Rajini, Village Administrative Officer received the bribe amount of Rs.1,000/- from the complainant. The accused was arrested and remanded. On completion of investigation, the case was charge sheeted against the accused. Today 13.10.2026 the Principal District Court Judge, Krishnagiri pronounced the judgment against Tr. Rajini, formerly Village Administrative Officer and sentenced him to undergo Rigorous Imprisonment for 4 years and fine of Rs.4,000/-.